வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 3516/ஆ4/2024 நாள்: 12.11.2024

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்வு –2024–2025 –மாணவர்கள் பெயர் பட்டியல் (Nominal Roll ) பதிவிறக்கம் செய்தல் மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ள மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு –தெரிவித்தல் –சார்பு

பார்வை : 1. அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.012426/ எப்.1/2024 நாள் 23.09.2024,15.10.2024, மற்றும் 11.11.2024
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள் 23.09.2024 மற்றும் 15.10.2024

===============

பார்வையில் காணும் அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க மார்ச்/ஏப்ரல் 2025, பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வுக்கான பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் பொருட்டு, அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் 24.09.2024 முதல் 15.10.2024 வரையிலான நாட்களில் தங்களது பள்ளியில் பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை முதலாமாண்டு பயிலும் அனைத்து மாணாக்கர்களது விவரங்களையும் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்து, தேர்வுக் கட்டணத்திலையும் இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும் எனத் இவ்வலுவலக மூலம் தெரிவிக்கப்பட்டது.

மேலும் அனைத்து வகை மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளிகள் முதல்வர்கள் 13.11.2024 பிற்பகல் முதல் 16.11.2024 வரையிலான நாட்களில் www.dge.tn.gov.in என்ற இணையதள முகவரிக்கு சென்று தங்கள் பள்ளிக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்டுள்ள USER ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி மார்ச் 2025 மேல்நிலை முதலாமாண்டு பொதுத் தேர்விற்கான தங்கள் பள்ளி மாண பெயர்ப்பட்டியலை பதிவிறக்கம் செய்திட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அவ்வாறு. பதிவிறக்கம் செய்யப்படும் பெயர்ப்பட்டியலில் திருத்தங்கள் இருப்பின், அத்திருத்தங்களை 15.11.2024 பிற்பகல் முதல் 22.11.2024 வரையிலான நாட்களில் அந்தந்த பள்ளிகளிலேயே மேற்கொள்ள வேண்டும். பின்னர் எக்காரணங்கொண்டும் வாய்ப்பு வழங்கப்படமாட்டாது திட்டவட்டமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் பொருள் சார்ந்து உரிய தேதிக்குள் மேல்நிலை முதலாமாண்டு பெயர்ப்பட்டியல் பணியினை முடித்திடஅனைத்து வகை மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் மீள தெரிவிக்கப்படுகிறது.

//ஓம்.செ.மணிமொழி//
முதன்மைக்கல்விஅலுவலர்
வேலூர்

பெறுநர்,

அனைத்து வகை மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் வேலூர் மாவட்டம்.

நகல்

1. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை/தனியார் பள்ளிகள் ) வேலூர், அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுப்பப்படுகிறது.